**தேசிய அறுவடைக்கு பிந்திய முகாமைத்துவ நிறுவனம் - 2023**

------------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய அறுவடைக்கு பிந்திய முகாமைத்துவ நிறுவனத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கான தகவல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் உள்ளடங்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிறுவனத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.
இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது

நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,
- நிறுவனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- நிறுவனத்தின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிறுவனத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்
### 1.5.1 இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 54 பந்தியின் பிரகாரம் சொத்துக்கள் தொகுதிக்குரிய ஒரு சொத்தின் மீள் மதிப்பீட்டுப் பெறுமதி அதிகரித்தல் அல்லது குறைவடைதல், அச் சொத்து உரித்தான தொகுதியின் வேறு சொத்தின் மதிப்பிற்கு ஈடு செய்யபட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் ஆய்வு கூட மற்றும் | கடந்த வருடத்தில் ஆய்வு கூட மற்றும் ஆராய்ச்சி உபகரணங்களின் மீள் மதிப்பீட்டுப் பெறுமதி குறைவடைந்தமை செயலாற்றல் கூற்றிற்கு வரவு வைக்கப்பட்டமையால் பற்றாக்குறையில் ஏற்பட்ட குறைவு மற்றும் உரிமையில் காட்டப்பட்டுள்ள மீள் மதிப்பீட்டு | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 54 பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஆராய்ச்சி உபகரணங்கள் தொகுதியின் உபகரணங்களின் மீள் மதிப்பீட்டுப் பெறுமதி அதிகரிப்பு உரிமையின் அதிகரிப்பொன்றாக, பெறுமதி குறைவடைதல் செயலாற்று அறிக்கையில் பற்றாக்குறையாக காட்டப்பட்ட காரணத்தால் வருடத்தின் பற்றாக்குறை ரூபா 553,930 ஆல் மற்றும் நிதிச் செயலாற்றல் கூற்றின் உரிமை அதே அளவினால் அதிகமாக காண்பிக்கப்பட்டிருந்தது. | ஒதுக்கத்தின் அதிகரிப்பு நாளேட்டு பதிவகளை பயன்படுத்தி திருத்தப்பட்டுள்ளது. | |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 ஆம் ஆண்டில் மற்றும் தற்போது செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற SSTC Pilot Project Phase-(iv) என்ற அபிவிருத்தி செயற் திட்டத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட Grid Solar Power System ஒன்றை கையகப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 2,690,000 ஆன செலவானது நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலை கணக்கிற்கு வரவு வைப்பதற்குப் பதிலாக அந்தக் காலப்பகுதிக்கான செலவொன்றாக கருதப்பட்டு நிதிச் செயலாற்றல் கூற்றில் பணியின் செயற்திட்ட அபிவிருத்தி செலவின் கீழ் காட்டப்பட்டமையால் வருடத்தின் பற்றாக்குறை ரூபா 2,690,000 அதிமாகவும் , நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறையல்லாச் சொத்துக்களின் கீழுள்ள நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலை அந்த அளவினால் குறைவாகவும் காட்டப்படடிருந்தது. | 2024 ஆம் ஆண்டில் பெப்ரவரி மாதத்தில் இந்த சூரிய பேனல் அமைப்பு பயன்படுத்தக்கூடிய வகையில் இலங்கை மின்சார சபையினால் உரிய இணைப்பு வழங்கப்பட்ட பின்னர் நிறுவனத்தின் சொத்தொன்றாக கணக்கிடப்பட்டுள்ளது என்பதை அன்புடன் அறியத்தருகின்றேன். | அபிவிருத்தி செயற் திட்டத்திற்காகச் செய்யப்படும் செலவுகள் மற்றும் செயற்திட்டம் முடிக்கப் படாதிருப்பின், அத்தகைய செலவினங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைகளாக நடைமுறையல்லாச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட வேண்டும். |
| (ஆ) | காலப்பகுதிக்கான பணிக்கொடைச் செலவாகக் கழிக்கப்பட்ட ரூபா 3,113,795 காசுப் பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டுள்ள காலப்பகுதிக்கான தேறிய மிகை /பற்றாக்குறைக்கு நிதி அல்லாத | பணிக்கொடைச் செலவின் மூலம் ஏற்படும் காசுப் பாய்ச்சல் கணக்கிடுவதில், அதன் நிகர விளைவு காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டபோது காட்டப்பட்டுள்ளது. | பணிக்கொடைச் செலவு காசுப் பாய்ச்சல் கூற்றில் நிதி அல்லாத பரிவர்த்தனைகளாக சேர்க்கப்பட்டு காட்டப்பட வேண்டும். |

| | |
|---|---|
| பரிவர்த்தனைகளாக சேர்க்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்வதற்குப் பதிலாக, நிதி நடவடிக்கைகளில் இருந்து உருவான காசுப் பாய்ச்சலின் கீழ் ரூபா 956,630 பணிக்கொடை ஒதுக்கீடு அதிகரிப்பாக சேர்க்கப்பட்டிருந்தது. | கணக்காய்வில் குறிப்பிடப்பட்டுள்ள முறையின்படி அடுத்த ஆண்டுக்கான காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**1.6 இணக்கப்படாத கட்டுப்பாட்டு கணக்கு மற்றும் அறிக்கை**

| விடயம் | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி<br>ரூபா | தொடர்புடைய அறிக்கைகளின் பிரகாரம் மீதி<br>ரூபா | வேறுபாடு<br>ரூபா | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| உள்ளக கற்கை நெறிகள், விரிவுரை மண்டபங்கள், உணவு பானம் மற்றும் விடுதிக் கட்டணங்கள் | 4,681,887 | 4,440,074 | 241,813 | ஆவணத்தை சரி செய்வதற்கு அத்துடன் இதுபோன்ற தவறுகள் எதிர்காலத்தில் நடைபெறாமல் தடுப்பதற்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்படடுள்ளது. | பயன்பாட்டு ஆவணங்களின் சரியான தன்மை உறுதிப்படுத்தப் பட்டதன் பின்னர் கணக்குகளுக்கு பிரதியெடுக்கப் பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 35,500,537 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 15,193,030 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 20,307,507 ஆன பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. இப்பின்னடைவிற்கு மூலதன மானியம் ரூபா 10,234,226 ஆல் அதிகரித்திருந்த போதிலும், காலக்கழிவு ரூபா 20,803,474 ஆல் குறைவடைந்தமை, ஏனைய செலவுகள் ரூபா 5,120,243 ஆல் அதிகரித்திருந்தமை மற்றும் செயற்திட்ட அபிவிருத்தி செலவுகள் ரூபா 15,540,646 ஆல் அதிகரித்திருந்தமையும் பிரதான காரணங்களாக இருந்தன.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 பொருளாதாரமற்ற கொடுக்கல்வாங்கல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஆம் வருடத்திலிருந்து 2019 வருடம் வரையான காலப்பகுதிக்குள் செயற்படுத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த இலங்கையின் விவசாயப் பொருட்களின் வழங்கல் | மேற்படி செயற்திட்டத்தின் கீழ் 100 Tempered Data Loggers மற்றும 100 GPS Trackers கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. நாடு | கணக்காய்வு அவதானிப்புகளை மீளாய்வு செய்து தீர்ப்பதற்கு முறையான |

மற்றும் மதிப்புச் சங்கிலி முகாமைத்துவ செயற்திட்டத்திற்காக 2018 ஏப்ரல் 05 ஆம் திகதி வருடத்தில் ரூபா 1,290,000 செலவிடப்பட்டு 100 Gps Trackers unit மற்றும் 2018 மார்ச் 22 ஆம் திகதி ரூபா 4,680,000 செலவிடப்பட்டு 130 Tempered data loggers கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. முறையான சாத்தியக்கூறு ஆய்வொன்று மேற்கொண்டு கொள்வனவு செய்யப்பட்ட மேற்படி உபகரணங்கள் பயன்படுத்தப்படாததால், அரசிற்கு நட்டமொன்று ஏற்பட்டுள்ளதால் அந்த உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு பரிந்துரைத்த, அங்கீகாரம் அளித்த மற்றும் பொறுப்பான பிற தரப்பினர் குறித்து எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மேலும் அமைச்சில் நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் கவனமும் செலுத்தப்பட்ட போதிலும், 2024 ஏப்ரல் 01 ஆந் திகதி வரையில் இது தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாததுடன் இச்செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்ட ரூபா 7,292,332 ஆன தொகை பொருளாதாரமற்ற செலவொன்றாக காணப்பட்டது.

முழுவதும் உள்ள பழங்கள் மற்றும் காய்கறி விநியோகச் சங்கிலிகளில் போக்குவரத்து மற்றும் நுகர்வு ஆகியவற்றின் போது வெப்பநிலை மாறுபாட்டை ஆய்வு செய்வதற்காக Tempered Data Loggers கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. GPS Trackers மூலம் பழம் மற்றும் காய்கறி விநியோகச் சங்கிலியில் விவசாயப் உற்பத்திப் பொருட்களின் இயக்க முறை தொடர்பாக ஆய்வு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டது.

GPS Trackers இயக்குவதற்கு சிம் அட்டை (Data) தேவைப்படுவதுடன் , 2018 ஆம் ஆண்டில் கொள்வனவு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாமையால் 2019 ஆம் ஆண்டில் இந்தத் செயற்திட்டம் தொடர்பான நடவடிக்கைகளை செயற்படுத்த தேவையான செயற்திட்ட முன்மொழிவுகள் விவசாய அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டும் அதற்கான நிதி கிடைக்காததுடன் நிலவிய கோவிட் 19 தொற்றுநோய் காரணமாக எதிர்பார்த்தபடி அந்த உபகரணங்களை பயன்படுத்தி செயற்திட்டத்தை செயற்படுத்த முடியவில்லை. இவற்றில் ஒரு பகுதி நிறுவனத்தின் பல்வேறு பணிகளுக்குப் பயன்படுத்தப்பட்டதுடன் மீதமுள்ள உபகரணங்கள் ஏனைய விவசாய் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு வழங்கப்படடிருந்தது. எதிர்காலத்தில் இதுபோன்ற சூழ்நிலைகள் ஏற்படாமல் தடுப்பதற்கு செயற்திட்ட முன்மொழிவுகளை தயாரிக்கும் போது சிறந்த சாத்தியக்கூறு ஆய்வுகளை நடாத்துமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2015 ஆம் வருடத்தில் ஆய்வக ஆராய்ச்சிக்காக ரூபா 15,216,575 இற்கு கொள்வனவு செய்யப்பட்டு வருடாந்தம் ரூபா 275,000 பராமரிப்புச் செலவினம் செலவிடப்படுகின்ற முழுமையான வாயு சீராக்கியுடனான சூழலில் பேணப்பட்டு வருகின்ற Gas Chromatograph Mass Spectrometer (CGMS) இயந்திரம் 2023 மார்ச் 20 வரையில் பல சந்தர்ப்பங்களில் உபயோகிக்கப்படாமல் விளைவற்றதாகக் காணப்பட்டது. இந்த இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டு 09 வருடங்கள் கடந்திருந்த போதிலும், இயந்திரத்தை பயன்பாட்டிற்காக அரச நிறுவனமொன்றிடம் ஒப்படைப்பதற்கான சாத்தியக் கூறுகள் தொடர்பாகவும் உயர் முகாமைத்துவத்தினால் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | இங்கு குறிப்பிடப்பட்டுள்ள Gas Chromatograph Mass Spectrometer தற்போது நிறுவனத்தில் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சி செயற்திட்டங்களுக்கு பயன்படுத்தப்படுகிறது. 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்படுகின்ற ஆராய்ச்சிகளில் மாதிரி பகுப்பாய்விற்கு இந்த இயந்திரம் தற்போது பயன்படுத்தப்படுகிறது. குறைப் பயன்பாட்டைத் தடுப்பதற்கு ஐந்தாண்டு செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டது. அந்த திட்டத்தின்படி 2022/2023/2024 ஆம் ஆண்டுகளில் 05 ஆய்வுகள் நடாத்தப்பட்டன. மேலும் இந்த இயந்திரம் மாதிரி பகுப்பாய்விற்கும் பயன்படுத்தப்படுகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். | இயந்திரத்தை தொடர்ந்து பயன்படுத்துவதற்கு அல்லது அதை பயனுள்ள அரசு நிறுவனத்திற்கு மாற்றுவதற்கு நிர்வாகம் கவனம் செலுத்த வேண்டும் |
| (ஆ) | அறுவடைக்குப் பின்னரான தேசிய முகாமைத்துவ நிறுவகத்தில் செயற்படுகின்ற ஆராய்ச்சிப்பிரிவின் மூலம் ஆராய்ச்சி செயன்முறைகளின் பின்னர் புதிய கண்டுபிடிப்புக்களை உற்பத்தி செய்தல் மற்றும் அவற்றை சமூகமயப்படுத்தல் பிரதான குறிக்கோள்களில் ஒன்றாகும். இருந்தபோதிலும், மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின்போது 2000 ஆம் ஆண்டிலிருந்து கணக்காய்வுத் திகதியான 2023 திசெம்பர் 31 வரையான 24 வருட காலப்பகுதியில் இயயந்திரப் பணிமனையில் பராமரிக்கப்பட்டு வருகின்ற தயாரிக்கப்பட்ட இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் பதிவேட்டின் பிரகாரம் வெளியிடப்பட்டுள்ள புதிதாக | ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது உள்நாட்டு இயந்திரங்கள் தயாரிப்பில் பயன்படுத்தப்படும் மூலப் பொருட்களின் விலை அதிகம் என்பதால், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் இயந்திரங்களை விட வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் மாற்று இயந்திரங்கள் மிகக் குறைந்த விலையில் விற்கப்படுவதால், இந்த இயந்திரங்களை சமூக மயமாக்குவது கடினம். மேலும் இந்த பெரும்பாலான இயந்திரங்கள் ஆராய்ச்சிகள் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டு 10 வருடங்களை விட அதிக காலம் கடந்துள்ளமையால் இயந்திரங்களை சமூகமயப்படுத்துவதில் சிரமமொன்று காணப்படுகின்றது. | சமூகத்தின் தேவைப்பாட்டினை கருத்திற்கொண்டு இயந்திரங்களை உற்பத்தி செய்வதற்கும், அவற்றை செயற்திறனாக சமூக மயப்படுததுவதன் மூலம் நிறுவனத்தின் செயலாற்றலை அதிகரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உற்பத்தி செய்யப்பட்ட 19 வகையான இயந்திரங்களில ஒரு வகையான இயந்திரம் மாத்திரமே சமூகமயப்படுத்தப்பட்டிருந்தது. | | |
| (இ) | ஆராய்ச்சிப்பிரிவின் மூலம் ஆராய்ச்சி செயன்முறைகளின் பின்னர் புதிய கண்டுபிடிப்புக்களை உற்பத்தி செய்தல் மற்றும் அவற்றை சமூகமயப்படுத்தல் பிரதான குறிக்கோளாக இருந்தபோதிலும், 2000 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் வருடம் வரையான காலப்பகுதியில் பேடண்ட் உரிமம் 09 இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களுக்கு மட்டுமே பெறப்பட்டிருந்தது. | 2000 மற்றும் 2021 ஆகிய காலத்தில் 09 பேடண்ட் உரிமங்கள் பெறப்பட்டிருந்ததுடன் அவை அனைத்தும் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் அல்ல என்பதுடன் மதிப்பு கூட்டப்பட்ட தயாரிப்புகள் மற்றும் உற்பத்தி முறைகளும் அவற்றில் அடங்கும். அனைத்து ஆராய்ச்சிகளின் முடிவுகளும் பேடண்ட் உரிமங்களைப் பெறுவதில் முடிவடைவதில்லை என்பதுடன் அந்த முடிவுகள் சில நிறுவனங்களின் பயிற்சி மற்றும் விரிவாக்கப் பிரிவின் தேவைகளுக்கு ஏற்ப வழங்கப்படுகின்றன. | ஆராய்ச்சி முடிவுகளின் சமூக மயமாக்கலுக்கான நிகழ்ச்சித் திட்டம் மற்றும் பேடண்ட் உரிமத்தைப் பெறுவதற்கான செயல்முறை உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | பழங்கள் மதிப்பு சங்கிலியில் பங்குதாரர்களுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் பழங்களைப் பதப்படுத்தும் மையமொன்றை நிறுவுதல் தொடர்பான பரிசோதனை தொடர்பான ரூபா 27.81 மில்லியன் ஆன செயற்திட்ட முன்மொழிவு தேசிய அறுவடைக்குப் பின்னரான முகாமைத்துவ நிறுவகத்தினால் 2023 மார்ச் 07 அன்று விவசாய அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் அளிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | நிறுவனத்தில் 14 ஆராய்ச்சி அலுவலர்கள் இருந்த போதிலும் செயற்திட்டத்திற்கு அங்கீகாரம் அளிப்பதற்கு முன்னர் அந்த அலுவலர்கள் மூலம் ஒரு சாத்தியக்கூறு ஆய்வொன்று மேற்கொள்ளப்படாது மற்றும் 5 ஆம் பந்தியில் முதன்மை நடவடிக்கைகளின் கீழ் சாத்தியக்கூறு ஆய்வொன்று தேவையற்றதென குறிப்பிடப்பட்டு செயற்திட்ட முன்மொழிவிற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டு ரூபா | இப்பணியை மேற்கொள்வதற்கு சமூகவியல் மற்றும் பொருளாதாரம் தொடர்பான நிபுணர்கள் நிறுவனத்தில் இல்லாத காரணத்தால், வெளி தரப்பினர் மூலம் இந்த சாத்தியக்கூறு ஆய்வை மேற்கொள்வதற்கு முடிவு செய்யப்பட்டது. | கணக்காய்வு அவதானிப்புகளை மீளாய்வு செய்து தீர்ப்பதற்கு முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| 1.0712 மில்லியன் சாத்தியக்கூறு ஆய்விற்காக கைத்தொழில் சேவைகள் பணியகத்திற்கு மதியுரை சேவைகள் கட்டணமாக ரூபா 970,000 செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ii) செயற்திட்ட முன்மொழிவிற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டபோது செயற்திட்ட முன்மொழிவு படிவத்தின் 4 ஆம் பந்தியில் நிலத்தை கையகப்படுத்துவது தேவையற்றது என்று குறிப்பிடப்பட்டு 2023 மார்ச் 07 அன்று முன்மொழிவு அங்கீகரிக்கப்பட்டு 05 மாதங்களுக்குப் 2023 ஆகஸ்ட் 16 இல் அம்பாந்தோட்டை பிரதேச சபையுடன் உடன்படிக்கை எட்டப்பட்டு அந்த பிரதேச சபைக்குச் சொந்தமான மயூரபுர சந்தைப் பகுதியில் அமைந்துள்ள புதிய களஞ்சியசாலை மற்றும் அந்த 32.1 x 18.2 மீற்றர் பரப்பளவை ஒதுக்கீடு அங்கீகரிக்கப்படாமல் பயன்படுத்துவதற்காக கையகப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுப்பதற்கு சம்மதம் பெறப்பட்டிருந்ததுடன் , செயற்திட்டத்தின் மொத்த ஒதுக்கீட்டில் மேற்படி கட்டிடத்தை பழுதுபார்ப்பதற்காக அங்கீகரிக்கப்பட்ட பொறியியல் மதிப்பீடின்றி ரூபா 20 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. | இச்செயற்திட்ட முன்மொழிவு தயாரிப்பின் போது, பழக் கூழ் பதப்படுத்தும் நிலையத்தை அமைப்பதற்கு பொருத்தமான கட்டிடமாக மகாவலி அதிகார சபைக்கு சொந்தமான கட்டிடம் அடையாளம் காணப்பட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. எவ்வாறாயினும், கட்டிடத்தை கையகப்படுத்துவதில் ஏற்பட்ட சிக்கல் நிலைமை காரணமாக, அம்பாந்தோட்டை பிரதேச சபையின் பயன்படுத்தப்படாத கட்டிடமொன்றுக்கு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, மதிப்பீட்டில் தேவையான கூறுகள் சேர்க்கப்பட்டன. இதற்காக நிர்வாக சபைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு, கட்டிடம் மற்றும் சுற்றுவட்டார பகுதியை பயன்படுத்துவதற்கு பிரதேச சபையுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டது. | கணக்காய்வு அவதானிப்புகளை மீளாய்வு செய்து தீர்ப்பதற்கு முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) விவசாய பயிர்களின் அறுவடைக்குப் பின்னரான சேதத்தைக் குறைப்பதே நிறுவனத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாக இருப்பதுடன் அதற்காக 2009 ஆம் வருடத்தில் நடாத்தப்பட்ட ஆரம்பகட்ட கணிப்பீட்டின் பிரகாரம் அழியாத விவசாயப் பயிர்களின் அறுவடைக்குப் பின்னரான சேதம் 30 சதவீதம் மற்றும் 40 சதவீதத்திற்கு இடைப்பட்டதாக காணப்பட்டமை அடையாளம் காணப்பட்டது. மீளாய்வாண்டின் இறுதியில், | விவசாய பயிர்களின் அறுவடைக்குப் பின்னரான சேதத்தின் தற்போதைய நிலைமை குறித்த நாடளாவிய ஆய்வொன்று 2021-2023 ஆம் ஆண்டில் தேசிய அறுவடைக்குப் பின்னரான முகாமைத்துவ நிறுவகத்தினால் நடாத்தப்பட்டது. கடந்த சில ஆண்டுகளில் அறுவடைக்குப் பின்னரான சேதத்தைக் குறைக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மூலம் அந்த பயிர்களின் அறுவடைக்குப் பின்னரான சேதம் | கணக்காய்வு அவதானிப்புகளை மீளாய்வு செய்து தீர்ப்பதற்கு முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கெடுப்பு நடாத்தப்பட்டு 14 ஆண்டுகள் கடந்திருந்ததுடன் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் தேசிய அறுவடைக்குப் பின்னரான முகாமைத்துவ நிறுவகத்தினால் அறுவடைக்குப் பின்னரான சேதத்தைக் குறைப்பதற்கு எடுக்கப்பட்ட நடைமுறையொன்றின் மூலம் அடையாளங் காணப்பட்டிருந்த அறுவடைக்குப் பின்னரான சேதம் குறைக்கப்பட்டிருந்த அளவானது சதவீதமொன்றாக எவ்வளவு என்பதை இனங் காணக்கூடிய வகையில் தரவுத்தளமொன்று நிறுவனத்திடம் இருக்கவில்லை. | குறைக்கப்பட்ட அளவு குறித்த தரவுகள் பெறப்பட்டுள்ளன. இது தொடர்பான இறுதி அறிக்கையொன்று நிறுவனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் சுருக்கமான அறிக்கையொன்று விவசாய அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ளது.அத்துடன் அறுவடைக்குப் பின்னரான சேதத்தின் தற்போதைய நிலைமை குறித்தும் மென்பொருள் ஊடகங்கள் மூலமும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்வதன் மூலம் அடையாளம் காணப்பட்ட புதிய தொழில்நுட்பங்களை வழங்குவதற்கான பயிற்சி, செயற்திட்டங்கள் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்வது ஆராய்ச்சி அதிகாரியின் பணியாக இருந்த போதிலும் , 2019 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்ட மொத்தப் பெறுமதி ரூபா 495,450 ஆன 03 ஆராய்ச்சிகள் மற்றும் 2021 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டுள்ள மொத்தப் பெறுமதி ரூபா 1,726,870 ஆன இரண்டு ஆராய்ச்சிகளின் இறுதி அறிக்கைகள் 2023 ஜுலை 31 வரை சமர்ப்பிக்கப்படவில்லை. | இனி வரும் காலங்களில் இதுபோன்ற பிரச்சினைகள் ஏற்படாமல் இருப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | ஆய்வு அறிக்கைகளைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.4 விளைவற்ற அல்லது குறைவாக பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 வரை ஆய்வு கூடத்தில் காணப்பட்ட மொத்த பெறுமதி ரூபா 8,336,705 ஆன Atomic Absorption Spectrophotometer மற்றும் Handle Wheel Vertical Autoclave ஆகிய 02 இயந்திரங்கள் செயலிழந்த காரணத்தினால் இந்த இயந்திரங்கள் பயன்னடுத்தப்படுகின்ற ஆராய்ச்சி நடவடிக்கைகள் முறையே 2018 மற்றும் 2019 ஆண்டுகளில் நிறுத்தப்பட்டன. | இவ்விரு உபகரணங்களும் பழுதடைந்த நிலையில் இருந்தபோது பழுதுபார்ப்பதற்கு சமர்ப்பிக்கப்பட்ட அதிக விலை மனுக்களுக்கு இயந்திரங்களை பழுதுபார்ப்பது நடைமுறையில் சாத்தியமற்றது என்பதால் இது தொடர்பில் விவசாய அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | இயந்திரங்களை பழுதுபார்த்து பயன்பாட்டுக்கு கொண்டுவருவதற்கு வேலைத்திட்ட மொன்று உருவாக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| இந்த இயந்திரங்களை திருத்தங்கள் செய்து பயன்படுத்துவதற்கு 2020 ஆம் ஆண்டு முதல் திட்டமிடப்பட்ட வேலைத்திட்டமொன்று நிறுவனத்திடம் இருக்கவில்லை. | எவ்வாறாயினும், நாட்டின் தற்போதைய நிலைமையின் அடிப்படையில், மீண்டும் பழுதுபார்ப்பிற்கான விலை மனுக்கள் கோரப்பட்டுள்ளன. விலைகள் நியாயமானவை/நடைமுறையில் இருப்பதாகக் கண்டறியப்பட்டால், அவை பழுதுபார்ப்பதற்காக விவசாய அமைச்சின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படும். |

### 3.5 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி அறிக்கையின் பிரகாரம் பாதுகாப்புச் சேவைக்காக அங்கீகரிக்கப்பட்ட காவலர் பதவிகள் ஆறும் வெற்றிடமாக இல்லாத இருந்தபோது போது அந்த காவலர் பதவியில் இருக்கும் 06 அதிகாரிகளில் மூன்று பேர் விடுதியின் பாதுகாப்பிற்கும், எஞ்சிய மூன்று பேர் அலுவலக உதவியாளர் பதவிக்கான கடமைகள் ஒதுக்கப்பட்டு பிரதான வாயிலின் பாதுகாப்பு சேவைக்காக 2018 பெப்ரவரி முதல் 2023 திசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்கு சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் பாதுகாப்பு அதிகாரிகளின் சேவை பெறப்பட்டமைக்காக அத்திணைகளத்திற்கு ரூபா 13,569,700 ஆன தொகையொன்று கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஆரம்ப நிலையில் அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் தொடர்பான வேலைகள் கருத்திற் கொள்ளப்பட்டு, உள்ளபடியான ஊழியர்களின் மூலம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பதவியணி தொடர்பான அறிக்கையின் பிரகாரம் குறிப்பிட்ட அதிகாரிகளினால் அப்பணிகள் நிறைவேற்றப்படாது ஏனைய நிறுவனத்தினால் | பணிப்பாளர் பத்திரம் BP 975 இன் மூலம் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்திடமிருந்து பாதுகாப்புச் சேவையைப் பெறுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. கணக்காய்வில் குறிப்பிடப்பட்டிருந்ததன் பிரகாரம் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் சேவையை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டால் அதற்காக தற்போது காணப்படும் அதிகாரிகளுக்கு மேலதிகமாக புதிதாக அதற்காக பாதுகாப்பு அதிகாரிகள் குறைந்தபட்சம் 02 பேராவது நியமிக்கப்படல் வேண்டும். அவ்வாறு நியமிப்பதற்கு இந்த சந்தர்ப்பத்தில் ஆட்சேர்ப்பதற்கான இயலுமையும் காணப்படவில்லை. எனவே மீண்டும் பாதுகாப்புப் பிரிவில் மாற்றம் செய்வது சிக்கலாக இருக்கும்.<br><br>இந்தக் காவலர் சேவைக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள 06 பேர் PLI சேவை தரத்தில் சேவையாற்றுவதால் அவர்களும் அலுவலக உதவியாளர், பராமரிப்பு உதவியாளர்களுக்குச் சமனான பதவியொன்றை வகிப்பதால் சேவைத் தேவையின் அடிப்படையில் | கணக்காய்வு அவதானிப்புகளை மீளாய்வு செய்து தீர்ப்பதற்கு முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| நிறைவேற்றப்பட்டிருந்தமை யால் ஏற்பட்ட பொருளாதாரமற்ற மேற்படி கொடுப்பனவிற்கு முகாமைத்துவம் பொறுப்பு என்பது அவதானிக்கப்பட்டது. | அப்பதவிகளுக்கு உரிய கடமைகள் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 சமூகப் பொறுப்புகளை நிறைவேற்றுதல்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2016 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆகஸ்ட் மாதம் வரை செயற்படுத்தப்பட்ட பழங்கள் பழுக்க வைப்பதற்கான சேதன முறைமையை அறிமுகம் செய்தலுக்கான ஆராய்ச்சியிலான (Induction Of Fruit Ripening By Organic method) கண்டுபிடிப்புக்களுக்காக பேடன்ட் உரிமை பெறல் மற்றும் ஆராய்ச்சியின் முடிவுகளை வர்த்தக மட்டத்தில் பரிமாற்றம் செய்தல் போன்ற நோக்கங்களுக்காக ரூபா 9,572,715 செலவிடப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வத் திகதியான 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் இச்செயற்திட்டம் செயற்படுத்தப்படவில்லை. | சேதன முறைகளால் பழங்களை பழுக்க வைப்பது (Induction Of Fruit Ripening By Organic method) என்ற ஆராய்ச்சி செயற்திட்டத்திற்காக, பழம் பழுக்க வைக்கும் செயல்முறை தொடர்பான சில அத்தியாவசிய ஆய்வக பகுப்பாய்வுகளுக்கு தேவையான உபகரணங்களை வாங்குவதற்கு இந்த தொகை செலவிடப்பட்டுள்ளது, மேலும் இது தொடர்பாக 03 ஆராய்ச்சி வெளியீடுகள் செய்யப்பட்டுள்ளன. மேலும், அடையாளம் காணப்பட்ட தொழில்நுட்பங்களை வணிக ரீதியாக பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறு குறைவாக உள்ளது என்பது அங்கீகரிக்கப்பட்டுள்ளது.<br>வர்த்தக ரீதியாக நம்பகத்தன்மை குறைவாக இல்லாததால் பேடன்ட் அனுமதிப்பத்திரம் பெறப்படவில்லை.<br>இதற்குத் தேவையான GC இயந்திரமொன்று, ஜெனரேட்டர், Refrigerated Centrifuge போன்ற தேவையான உபகரணங்களைப் பெறுவதற்கு எண்பத்தி இரண்டு லட்சம் ரூபா வரை செலவிடப்பட்டுள்ளது, இந்த உபகரணங்கள் ஏற்கனவே பயன்பாட்டில் உள்ளன. | கணக்காய்வு அவதானிப்புகளை மீளாய்வு செய்து தீர்ப்பதற்கு முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2017 ஆம் ஆண்டின் கமத்தொழில் அமைச்சின் ஒதுக்கீடுகளின் மூலம் தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் | செயற்திட்டத்தின் ஆரம்ப திட்டத்தின்படி, 1000 மாதிரிகளை பரிசோதித்த பிறகு இறுதி அறிக்கை வெளியிட திட்டமிடப்பட்டப் | கணக்காய்வு அவதானிப்புகளை மீளாய்வு செய்து தீர்ப்பதற்கு முறையான |

இறக்குமதி செய்யப்படுகின்ற 07 உணவு வகைகளில் 04 கனரக உலோக கலப்படங்கள் உள்ளடங்கியுள்ளதா என மதிப்பிடுவதற்கு அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டத்திற்காக 2017 ஆம் ஆண்டில் ரூபா 1,956,120 செலவிடப்பட்டு 500 மாதிரிகள் பரீட்சிக்கப்பட்டன. இச்சோதனைகள் அடங்கிய செயற்திட்ட அறிக்கையின் பிரகாரம் உணவுப் பொருட்களில் அதிகூடிய பாதுகாப்பு மட்டங்களை விஞ்சியதாக Cadmium, Arsenic and Leaf போன்ற கனரக உலோகக் கலப்படங்கள் உள்ளடங்கியுள்ளதாக சோதனைகளின் போது குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், அவ்வறிக்கையின் முடிவுகள் மற்றும் திட்டத்தின் பிரகாரம் கனரக உலோக கலப்படங்கள் உள்ள உணவுப் பொருட்கள் சம்பந்தமாக மேலதிகச் சோதனைகள் நிறுவகத்தினால் செய்யப்பட்டு அது சம்பந்தமான தகவல்கள் சரியான தீர்வுகளை காணும் வகையில் பொறுப்பு வாய்ந்த சகல தரப்பினருக்கும் வழங்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் 2023 ஆம் ஆண்டில் அமைச்சில் நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழுவில் கவனம் செலுத்தப்பட்டிருந்ததுடன் செலவிடப்பட்ட பணம் விளைவற்ற செலவினமொன்றாக காணப்பட்டது

பட்டுள்ளமையால் முதல் ஆண்டில் 500 மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன. ஆனால் அடுத்த 500 மாதிரிகளை பகுப்பாய்வு செய்வதற்கு பணம் வழங்கப்படாததால், அந்த பகுப்பாய்வு செய்யப்பட்ட 500 மாதிரிகளின் அறிக்கை அடுத்தகட்ட நடவடிக்கைக்காக விவசாய அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த ஆராய்ச்சி தொடர்பான ஆய்வுக்கட்டுரை 2019 இல் வெளியிடப்பட்டுள்ளது.

நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.